**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், அரியலூர்</u>**

**முன்னிலை: திருமதி.M.S.மணிமேகலை, எல்.எல்.எம்.,**
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
அரியலூர்.

2026 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 23–ஆம் நாள் வியாழக்கிழமை

**<u>அமர்வு வழக்கு எண்.79/2023.</u>**
(C.N.R.No.TNAL 01 – 003947 – 2023)

(முதன்மை பதிவேட்டு வழக்கு எண்.15/2023 குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற எண்.1, ஜெயங்கொண்டம்.)

| | | |
|---|---|---|
| அரசுக்காக குற்றமுறையிடுபவர் | | காவல் ஆய்வாளர்,<br>டி.பழூர் காவல் நிலையம்<br>குற்ற எண்.130/2021. |
| எதிரி | | **சங்கர், வயது 45,**<br>த/பெ. ராமச்சந்திரன்,<br>அக்ரஹாரத்தெரு,<br>மதனத்தூர்,<br>உடையார்பாளையம் தாலுக்கா,<br>அரியலூர் மாவட்டம். |
| நீதிமன்ற காவலில் இருந்த காலம் | | 25.03.2025 – 23.04.2025 |
| நீதிமன்றத்தில் புகார் / இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | | 22.06.2023 |
| இவ்வழக்கு மேல்விசாரணைக்காக இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப் பட்ட நாள் | | 30.08.2023 |
| எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 228–ன்கீழ் குற்றச்சாட்டுக்கள் குறித்து வினவப்பட்ட நாள் | | 06.07.2024 |
| வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | | **<u>முதலாவதாக (எதிரிமீது):</u>**<br>05.03.2021 ஆம் தேதி 15.00 மணியளவில் மதனத்தூர் மெயின்ரோட்டில் உள்ள |

| | | |
|---|---|---|
| | | கோவிந்தராசு மகன் மனோகரன் என்பவர் வீட்டிற்கு வைக்கோல் போர் போட வேலை செய்துகொண்டிருந்தபோது வாதியை அசிங்கமாக திட்டியதற்கு இ.த.ச.பிரிவு **294(b)** இன் படியும், தண்டிக்கப்படத்தக்கவர்.<br><br>**<u>இரண்டாவதாக (எதிரி மீது):</u>**<br>மேற்படி அதே நாள் மேற்சொன்ன சம்பவத்தின் தொடர்ச்சியாக உமது கையில் இருந்த அருவாளை எடுத்து இத்தோடு ஒழிந்துபோடா என்று சொல்லி புகார்தாரர் தலையில் ஓங்கி வெட்டி கொலை செய்ய முயற்சி செய்த குற்றச்செய்கையானது இ.த.ச.பிரிவு **307 இன்** படி தண்டிக்கப்படத்தக்கவர்.<br><br>**<u>மூன்றாவதாக (எதிரி மீது):</u>**<br>மேற்படி எதிரியாகிய நீர் உமது கையில் வைத்திருந்த அருவாளால் வாதியின் வலதுபக்க தலையிலும், இடது உள்ளங்கையிலும் வெட்டி சொற்பகாயத்தை ஏற்படுத்திய குற்றச்செய்கையானது இ.த.ச.பிரிவு **323 இன்** படி தண்டிக்கப்படத்தக்கவர்.<br><br>**<u>நான்காவதாக (எதிரி மீது):</u>**<br>மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரியாகிய நீர் உமது கையில் வைத்திருந்த கத்தியை காட்டி வாதிக்கு கொலை மிரட்டல் விடுத்த குற்றச்செய்கையானது **இ.த.ச.பிரிவு 506(ii)இன்** படி |

<table>
<tr><td></td><td></td><td>தண்டிக்கப்படத்தக்கவர்.</td></tr>
<tr><td>எதிரியின் பதிலுரை</td><td></td><td>குற்றவாளி இல்லை</td></tr>
<tr><td>கு.வி.மு.ச. பிரிவு 317–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களைத் தவிர்த்து, குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அவற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவினை எதிர்த்து மேல் முறையீட்டு நீதிமன்றங்களில் பிறப்பிக்கப் பட்டுள்ள உத்திரவின் விபரம்</td><td></td><td>–</td></tr>
<tr><td>எதிரியின் தலைமறைவு மற்றும் அவரது முன்னிலை / ஆஜர்படுத்தப்பட்ட விவரம் ஏதேனும் இருப்பின்</td><td></td><td>இல்லை</td></tr>
<tr><td>மேலமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்பட்டுள்ள தடை உத்தரவு மற்றும் அதன் முடிவு</td><td></td><td>இல்லை</td></tr>
<tr><td>சாட்சிகளின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td></td><td>
<table>
<tr><th>சாட்சி</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>02.12.2024</td><td>02.03.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>02.12.2024</td><td>17.06.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>02.12.2024</td><td>02.03.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>02.12.2024</td><td>02.03.2026</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>03.12.2024</td><td>02.03.2026</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>03.12.2024</td><td>17.06.2026</td></tr>
<tr><td>அ.சா.7</td><td>03.12.2024</td><td>02.03.2026</td></tr>
<tr><td>அ.சா.8</td><td>22.07.2025</td><td>17.06.2026</td></tr>
<tr><td>அ.சா.9</td><td>22.06.2026</td><td>22.06.2026</td></tr>
<tr><td>அ.சா.10</td><td>22.07.2026</td><td>22.07.2026</td></tr>
</table>
</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(பி) இன் கீழ் வினவப்பட்ட நாள் | | 23.07.2026 |
| எதிரியின் பதில் | | பொய் சாட்சி |
| நீதிபதியின் தீர்மாணம் | | எதிரி இ.த.ச.பிரிவு 294(b), 307, 323, 506(ii) இன் படி குற்றவாளி இல்லை. |
| தண்டனை அல்லது உத்தரவு | | இவ்வழக்கில் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 307, 323, 506(ii) இன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் உரிய முறையில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரி குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 235(1) இன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மேற்படி எதிரிக்கு பிணைமுறி ஏதேனும் இருப்பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு, C.P.No.11/2024 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.1 – கத்தி மேல்முறையீட்டுகாலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு என் முன்பாக 23.07.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்ததில், அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.M.விக்னேஷ்வரன் அவர்களும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு. S.சீனிவாசராகவன் அவர்கள் ஆஜராகியும், சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலித்து, இரு தரப்பு வாதங்களையும்

கேட்டு, இதுநாள் வரை எனது சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

குற்றமுறையிடுபவரான தா.பழூர் காவல் நிலைய ஆய்வாளர் எதிரி மீது தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையில், இவ்வழக்கின் வாதி கலைவாணன் என்பவர் மதனத்தூர் தெற்குத்தெருவில் குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், வாதி கடந்த 05.03.2021ம் தேதி 15.00 மணிக்கு மதனத்தூர் மெயின்ரோட்டில் உள்ள கோவிந்தராசு மகன் மனோகரன் என்பவர் வீட்டிற்கு வைக்கோல் போர் போட வேலை செய்துகொண்டு இருந்தபோது இவ்வழக்கின் எதிரி சங்கர் என்பவர் குடிபோதையில் அங்கு வந்து வாதியிடம் வீண் தகராறு செய்தபோது, வாதியானவர் எதிரியிடம் ஏன் வீண் தகராறு செய்கின்றாய் என்று கேட்டபோது எதிரி அப்படிதான் பேசுவேன் என்று சொல்லி "தேவடியா மகனே , குச்சிகாரி மகனே " என்று வாதியை திட்டி அவரை கையால் அடித்ததாகவும், வாதி என்னை வேலையை செய்யவிடு என்று சொன்னதற்கு அப்படிதான்டா பேசுவேன் என்று சொல்லி, எதிரி சங்கர் தன் கையில் வைத்து இருந்த அருவாளை எடுத்து இத்தோடு ஒழிந்துபோடா என்று சொல்லி வாதியின் வலது பக்கம் தலையிலும், இடது உள்ளங்கையிலும் வெட்டி வாதிக்கு சொற்பகாயத்தை ஏற்படுத்தி கொலை மிரட்டல் விட்டுச் சென்றதாகக் கூறி அதனால், எதிரி இ.த.ச.பிரிவுகள் 294(b), 307, 323, 506(ii) ன்படி தண்டிக்கப்பட வேண்டியவர் என்று கூறி T.பழூர் காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2).** இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கையானது, ஜெயங்கொண்டம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 இன் முன்பாக தாக்கல் செய்யப்பட்டதனைப்பெற்று, முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.15/2023

ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, பின்னர் அழைப்பாணையின் பேரில், எதிரியானவர் முன்னிலையானவுடன், வழக்கின் நகல்கள் இலவசமாக குற்றவியல் நடைமுறை விசாரணை சட்டம் பிரிவு 207–இன் கீழ் வழங்கப்பட்டுள்ளது, இவ்வழக்கில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அமர்வு நீதிமன்றத்தால் மட்டும் விசாரிக்கப்படத்தக்கது என்ற காரணத்தினால், கற்றறிந்த குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக அரியலூர், முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 209–இன் கீழ் சமர்ப்பித்துள்ளார். அவ்வாறு, சமர்ப்பிக்கப்பட்ட வழக்கு கோப்பினை, அரியலூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் பெறப்பட்டு, அமர்வு வழக்கு எண்.79/2023 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில், வழக்கு கோப்பானது விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி வழக்கு கோப்பானது இந்நீதிமன்றத்தால் பெறப்பட்டு மேல்நடவடிக்கைக்காக உத்தரவிடப்பட்டுள்ளன.

**3)**இவ்வழக்கின் எதிரியானவர், இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரீசலிக்கப்பட்டும், எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் முதல் நோக்கு வழக்கில் புலனாவதால், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்தினைப் பொறுத்து வினவிய பொழுது, எதிரி தனது குற்றத்தை மறுத்த காரணத்தினால், பின்னர் இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரீசிலிக்கப்பட்டும், எதிரி மீது இ.த.ச.பிரிவு 294(b), 307, 323, 506(ii) இன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து தமிழில் படித்துக் காட்டி விளக்கி வினவியபோது, எதிரி தம் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்தார். எதிரியின் குற்ற மறுப்பினை அடுத்து அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டு, அரசு தரப்பில் அ.சா.1

முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.11 வரையிலான ஆவணங்களும், சான்றுபொருட்கள் சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4).** (I) அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள 10 சாட்சிகளில், அ.சா.1 திரு.கலைவாணன் என்பவர் இவ்வழக்கின் வழக்கு சம்பவம் பற்றி புகார் வாக்குமுலம் கொடுத்த நபர் ஆவார். கடந்த 05.03.2021 அன்று மதியம் 3.00 மணியளவில் தங்கள் ஊரைச்சேர்ந்த மனோகரன் என்பவர் வீட்டில் வைக்கோல் போர் போட்டுக்கொண்டிருந்தபொழுது, அங்கு வந்த எதிரி அசிங்கமாக திட்டி அவரது கையில் வைத்திருந்த அரிவாளால் புகார்தாரரின் வலதுபக்க மண்டையில் வெட்டியும், அதனை அவரது கையால் தடுக்க வந்தபோது அவரது இடது உள்ளங்கையில் வெட்டுபட்டும், என்றும், தாம் கத்தும் சத்தம் கேட்டு பக்கத்தில் இருந்த கோவிந்தராஜ் மகன் மனோகரன், கண்ணன் மகன் ரவிச்சந்திரன், முத்தையன் மகன் செந்தில்குமார், விமல் மனைவி புனிதா, மதியழகன் மனைவி சைலஜா ஆகியோர்கள் அருகில் வந்ததும், எதிரி தம்மை விட்டுவிட்டு சென்றுவிட்டதாகவும், உன்னை விடமாட்டேன் அவ்வாறு போகும்போது தீர்த்துக்கட்டிவிடுவேன் என்று மிரட்டிவிட்டுப்போனதாகவும், எதிரியாகிய நீர் வெட்டிய அரிவாளை தம்மால் அடையாளம் காட்டமுடியும் என்றும், தற்பொழுது தம்மிடம் காட்டப்படும் அரிவாள் சா.பொ.1 என்றும், பின்னர் சுரேஷ் மனைவி லதா, ரமேஷ் மனைவி கவிதா ஆகியோர் என்னை 108 ஆம்புலன்சில் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தனர் என்றும், தா.பழூர் போலீசார் தம்மை மருத்துவமனையில் விசாரித்தபோது தாம் சொன்னதை எழுதிக்கொண்டார்கள் என்றும், தம்மிடம் அந்த புகாரில் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள் என்றும், தம்மிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆகும் என்றும், தாம் மருத்துவமனையில் ஐந்து நாட்கள்

சிகிச்சை பெற்றதாகவும், தமது தலையிலும், கையிலும் 55 தையல் போட்டார்கள் என்றும், இது சம்மந்தமாக போலீசார் தம்மை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(ii) வழக்கு சம்பவத்தினை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 அவரது சாட்சியத்தில், கடந்த 05.03.2021 அன்று மதியம் 3.00 மணியளவில் அ.சா.1 கலைவாணன் அவரது வீட்டில் வைக்கோல் போர் போட்டுக்கொண்டிருந்தார் என்றும், தாம் அந்த இடத்தை கலைவாணணிடம் காட்டிவிட்டு தான் வைத்திருக்கும் மளிகை கடைக்கு போனேன் என்றும், சுமார் 100 அடிக்குள் நடந்து போய்க்கொண்டிருந்தபொழுது கன்னாபின்னாவென்று திட்டிக்கொண்ட சத்தம் கேட்டது என்றும், நான் அந்த இடத்தில் இருந்து திரும்பி பார்த்துக்கொண்டு வந்தபோதே சங்கர் அரிவாளால் கலைவாணன் தலையில் வலதுபக்கம் வெட்டினார் என்றும், கலைவாணன் கையால் தடுத்தபொழுது அதே அரிவாளால் இரண்டாவது வெட்டை கலைவாணன் இடது கையில் வெட்டினார் என்றும், ஆஜர் எதிரியாகிய நீர் தெற்குபக்கமாக ஓடிவிட்டீர் என்றும், எதிரியாகிய நீர் கலைவாணணை வெட்டிய அரிவாளை தம்மால் அடையாளம் காட்டமுடியும் என்றும், சா.பொ.1 தான் அந்த அரிவாள் என்றும், கலைவாணன் மயங்கி கீழே விழுந்துவிட்டார் என்றும், சுத்தி இருந்த ஜனங்கள் எல்லாம் அங்கு வந்துவிட்டார்கள் என்றும், கலைவாணனை மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துப்போனார்கள் என்றும், இது சம்மந்தமாக போலீசார் மறுநாள் தம்மை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) இவ்வழக்கு சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.3, அ.சா.4 மற்றும் அ.சா.6 ஆகியோர்கள் அ.சா.1 மற்றும் அ.சா.2 அளித்துள்ள சாட்சியங்களை ஒத்துரைத்து சாட்சியமளித்துள்ளனர். மேலும், அ.சா.5 வழக்கு சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டதாக கூறி

சாட்சியமளித்து அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்காமல் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) இவ்வழக்கு சம்பவத்தை பற்றி கேள்விப்பட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.7 கடந்த 05.03.2021 அன்று மதியம் 3.00 மணியளவில் கலைவாணனை எதிரி வெட்டிவிட்டதாக சொன்னார்கள் என்றும், பின்பு தாங்கள் சென்று ஆம்புலன்ஸ் மூலம் கலைவாணனை கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம் என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

(v) இவ்வழக்கின் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளாக கையொப்பம் இட்ட சாட்சிகள் அ.சா.8 மற்றும் அ.சா.9 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.8 அவருடைய சாட்சியத்தில், எதிரிக்கும், கலைவாணனுக்கும் இடையே தமது வீட்டிற்கு எதிரே உள்ள மனோகரன் என்பவர் வீட்டிற்கு முன்பு சண்டை போட்டுக்கொண்டார்கள் என்று கேள்விப்பட்டேன் என்றும், போலீசார் தம்மை விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள் என்றும், சண்டை நடந்த இடத்தை வரைபடம் வரைந்தார்கள் என்றும், தம்மிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து அ.த.சா.ஆ.2 என்றும் குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார்.

(vi) இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.9 அளித்துள்ள சாட்சியத்தில், சுமார் 1 ½ வருடங்களுக்கு முன்பு அவரது சொந்த வேலையாக த.பழூர் காவல் நிலையம் சென்று இருந்தபோது அவரிடம் கையெழுத்து கேட்டதனால் போட்டுக்கொடுத்தேன் என்றும் கூறி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்காமல் பிறழ்சாட்சியமளித்துள்ளார். அ.சா.10 இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி ஆவார்.

**5).** அத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டு, எதிரியிடம் சாட்சியங்களில் அவருக்கு பாதகமாக உள்ள விவரங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1) (b)–ன்கீழ் விளக்கி கூறி வினவியபோது, எதிரி சாட்சியங்களை மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

**6).** தற்போது தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 307, 323, 506(ii) இன் படி சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதாகும்.

**7). தீர்வு:**

(I) இவ்வழக்கில் வாதி கடந்த 05.03.2021ம் தேதி 15.00 மணிக்கு மதனத்தூர் மெயின்ரோட்டில் உள்ள கோவிந்தராசு மகன் மனோகரன் என்பவர் வீட்டிற்கு வைக்கோல் போர் போட வேலை செய்துகொண்டு இருந்தபோது இவ்வழக்கின் எதிரி சங்கர் என்பவர் குடிபோதையில் அங்கு வந்து வாதியிடம் வீண் தகராறு செய்தபோது, வாதியானவர் எதிரியிடம் ஏன் வீண் தகராறு செய்கின்றாய் என்று கேட்டபோது எதிரி அப்படிதான் பேசுவேன் என்று சொல்லி "தேவடியா மகனே , குச்சிகாரி மகனே " என்று வாதியை திட்டி அவரை கையால் அடித்ததாகவும், வாதி என்னை வேலையை செய்யவிடு என்று சொன்னதற்கு அப்படிதான்டா பேசுவேன் என்று சொல்லி, எதிரி சங்கர் தன் கையில் வைத்து இருந்த அருவாளை எடுத்து இத்தோடு ஒழிந்துபோடா என்று சொல்லி வாதியின் வலது பக்கம் தலையிலும், இடது உள்ளங்கையிலும் வெட்டி வாதிக்கு சொற்பகாயத்தை ஏற்படுத்தி கொலை மிரட்டல் விட்டுச் சென்றார் என்பது எதிரி மீதான அரசு தரப்பு குற்றச்சாட்டுக்கள் ஆகும்.

மேற்படி இவ்வழக்கு சம்பவத்தில் காயமுற்ற அ.சா.1 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில்,

**நான் அரியலூர் மாவட்டம், மதனத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். ஆஜர் எதிரி சங்கரை தெரியும். கடந்த 05.03.2021 அன்று மதியம் 3.00 மணியளவில் எங்கள் ஊரைச்சேர்ந்த மனோகரன் என்பவர் வீட்டில் வைக்கோல் போர் போட்டுக்கொண்டிருந்தேன். அப்பொழுது, அங்கு வந்த சங்கர் குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே உன்னை யார் வேலை பார்க்க சொன்னது என்று கேட்டார். என்னை ஏன் திட்டுகிறாய் என்று நான் கேட்டதற்கு உன்னை தீர்த்தக்கட்டாமல் விடமாட்டேன் என்று கூறிக்கொண்டே அவர் கையில் வைத்திருந்த அரிவாளால் எனது வலதுபக்க மண்டையில் வெட்டினார். நான் கையால் தடுக்க வந்தபோது எனது இடது உள்ளங்கையில் வெட்டிவிட்டார். நான் கத்தும் சத்தம் கேட்டு பக்கத்தில் இருந்த கோவிந்தராஜ் மகன் மனோகரன், கண்ணன் மகன் ரவிச்சந்திரன், முத்தையன் மகன் செந்தில்குமார், விமல் மனைவி புனிதா, மதியழகன் மனைவி சைலஜா ஆகியோர்கள் அருகில் வந்ததும் எதிரி என்னை விட்டுவிட்டு சென்றுவிட்டார். உன்னை விடமாட்டேன் அவ்வாறு போகும்போது தீர்த்துக்கட்டிவிடுவேன் என்று மிரட்டிவிட்டுப்போனார். என்னை எதிரி வெட்டிய அரிவாளை என்னால் அடையாளம் காட்டமுடியும். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் அரிவாள் சா.பொ.1. பின்னர். சுரேஷ் மனைவி லதா, ரமேஷ் மனைவி கவிதா ஆகியோர் என்னை 08 ஆம்புலன்சில் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தனர். தயமூர் போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தார்கள் நான் சொன்னதை எழுதிக்கொண்டார்கள். என்னிடம் அந்த புகாரில் கைபெழுத்து வாங்கிக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் அதசாஆ.1 ஆகும். நான் மருத்துவமனையில் ஐந்து நாட்கள் சிகிச்சை பெற்றேன். எனது தலையிலும், கையிலும் 55 தையல் போட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

என்று சாட்சியமளித்துவிட்டு மேற்படி அவரை எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொண்டபோது

> **அந்த நான் இதற்கு முன்பாக நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொன்ன சாட்சியங்கள் போலீசார் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் சொன்னேன் என்றால் சரிதான். போலீசார் என்னிடம் எழுதிய பேப்பரில்தான் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றும், என்னிடம் அதை படித்துக் காண்பிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரி சங்கர் என் மீதும், குணசேகரன் என்பவர் மீதும் வழக்கு கொடுத்து, அது ஜெயங்கொண்டம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 அவர்கள் முன்பாக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு இந்த நீதிமன்றத்தில் போலீசார் சொல்லிக்கொடுத்ததன்பேரில் முதல் விசாரணையில் சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று 50, 60 பேர் இருந்து ஒரே கூட்டமாக இருந்தார்கள் என்றும், யார் வெட்டினார்கள், யார் திட்டினார்கள் என்று என்னால் குறிப்பிட்டு கூறமுடியாது என்று சொன்னால் சரிதான். என் மீதும். குணசேகரன் மீதும் இந்த வழக்கின் எதிரி சங்கர் வழக்குக் கொடுத்துவிட்டதால் அந்த கோபத்தின் பேரில் நான் இந்த வழக்கில் சாட்சியமளித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அந்த கூட்டத்தில் எதிரி சங்கர் இருக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை**

என்று குறிப்பிட்டு அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்காமல் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும், இவ்வழக்கில் பார்வை மகசர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.8 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில்

> **..........போலீசார் என்னை விசாரித்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். சண்டை நடந்த இடத்தை வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில்**

**உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான்.**

என்று குறிப்பிட்டு சாட்சியமளித்துவிட்டு மேற்படி அவரது குறுக்குவிசாரணை சாட்சியத்தில்,

> **புகார்தாரர் மற்றும் சாட்சி சங்கருக்கு சண்டை நடந்தது சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் எழுதாத வெள்ளைப்பேப்பரில் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அதில் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணையில் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான்.**

என்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) மேலும், இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் சாட்சி கையொப்பம் இட்டுள்ள அ.சா.9 என்பவர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்காமல் பிறழ்சாட்சியமளித்துள்ளார்.

**(iii)** மேற்படி இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 அவரது முதல் மற்றும் குறுக்குவிசாரணை சாட்சியத்தில் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். மேலும், பார்வை மகசர் சாட்சி அ.சா.8 முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் கையொப்பம் இட்டுள்ள அ.சா.9 பிறழ்சாட்சியமளித்துள்ளார்.

(iv) மேற்படி சாட்சிகள் அளித்துள்ள சாட்சியங்களின் அடிப்படையில் எதிரிதான் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார் என்று முடிவு செய்ய அரசு தரப்பு தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபிக்காத நிலையிலும், மேற்படி எதிரிதான் இக்குற்றத்தை செய்ததைக் குறிக்கும் வகையில் எந்தவொறு சாட்சியமும் ஆதாரமும் இல்லாத நிலையில், மேற்படி எதிரி அக்குற்றத்தைச் செய்தவர் என்ற முடிவிற்கு வர இயலாது என்றும், மேலும் இவ்வழக்கின் புகார்தாரர்

அ.சா.1 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லாமல் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**முடிவாக,**

இவ்வழக்கில் எதிரி மீது **இ.த.ச.பிரிவுகள் 294(b), 307, 323, 506(ii) இன் கீழ்** சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் உரிய முறையில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரி குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 235(1) இன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மேற்படி எதிரிக்கு பிணைமுறி ஏதேனும் இருப்பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு, C.P.No.11/2024 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.1 – கத்தி மேல்முறையீட்டுகாலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 23.07.2026 இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MUTHANDIKUPPAM SHANMUGAM MANIMEKALAI

Digitally signed by MUTHANDIKUPPAM SHANMUGAM MANIMEKALAI
Date: 2026.07.23 18:05:07 +0530

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

| அரசு தரப்பு சாட்சிகள் | சாட்சியின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1 | திரு.கலைவாணன் | சம்பவத்தில் காயமுற்ற நபர் |
| 2 | திரு.மனோகரன் | சம்பவத்தை கண்ணுற்ற நபர் |
| 3 | திரு.செந்தில்குமார் | சம்பவத்தை கண்ணுற்ற நபர் |
| 4 | திரு.ரவிச்சந்திரன் | சம்பவத்தை கண்ணுற்ற நபர் |
| 5 | திருமதி.சைலஜா | சம்பவத்தை கண்ணுற்ற நபர் |
| 6 | திருமதி.புனிதா | சம்பவத்தை கண்ணுற்ற நபர் |
| 7 | திருமதி. கவிதா | சம்பவத்தை கேள்விபட்ட நபர் |
| 8 | திரு.குணசேகரன் | பார்வை மகசர் சாட்சி |
| 9 | திரு.இளம்பரிதி | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| 10 | திரு.வேல்முருகன், காவல் உதவி ஆய்வாளர் | புலன்விசாரணை அதிகாரி |

**எதிரிதரப்பு சாட்சிகள்:– இல்லை**

**அரசு தரப்பு ஆவணங்கள்::–**

| Exhibit No. | Description of the Exhibit | Proved by/ Attested by |
|---|---|---|
| 1 | புகார் | அ.சா.1 |
| 2 | பார்வை மகசரில் உள்ள கையெழுத்து | அ.சா.8 |
| 3 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள | அ.சா.9 |

| | | |
|---|---|---|
| | கையெழுத்து | |
| 4 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து | அ.சா.9 |
| 5 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.9 |
| 6 | பார்வை மகசர் | அ.சா.9 |
| 7 | வரைபடம் | அ.சா.9 |
| 8 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.9 |
| 9 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.9 |
| 10 | படிவம் 91 | அ.சா.9 |
| 11 | காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு | அ.சா.9 |

**<u>எதிரிதரப்பு ஆவணங்கள்:–இல்லை</u>**

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>:**

| Material Object No. | Description of the Exhibit | Proved by/Attested by |
|---|---|---|
| 1 | சுமார் 43 செ.மீ நீளம் உள்ள கத்தி ஒன்று | அ.சா.1 |

MUTHANDIKUPPAM SHANMUGAM MANIMEKALAI

Digitally signed by MUTHANDIKUPPAM SHANMUGAM MANIMEKALAI
Date: 2026.07.23 18:05:16 +0530

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.